## ஜப்பானில் உள்ள நம் தமிழ்ச் சொந்தங்களிடையே

# தமிழைக் கற்பதிலும் - கற்பிப்பதிலும் பெரும் எழுச்சியை உருவாக்குவீர்!

## ஜப்பான் வாழ் தமிழர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**டோக்கியோ, மே 30 -**

**“ஜப்பானில் உள்ள நம் தமிழ்ச் சொந்தங்களிடையே தமிழைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் பெரும் எழுச்சியை உருவாக்குவீர்” என்று ஜப்பான்வாழ் தமிழர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும்போது வேண்டுகோள் விடுத்தார்.**

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுத்திடவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கிலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு தற்போது ஜப்பானில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு முறைப் பயணம் மேற்கொண்டு வருகிறார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (28.5. 2023) டோக்கியோவில், ஜப்பான் வாழ் தமிழர்கள் சார்பில் வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், ஜப்பான் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் தமிழ் பாரம்பரிய கலாச்சா ரத்தைப் போற்றும் வகையில் நடைபெற்ற தமிழர் தற்காப்புக் கலையான வர்மக் கலை, பரதநாட்டியம், மிருதங்க இசை நிகழ்ச்சி, சிலம்பாட்டம், மயிலாட்டம், கும்மியாட்டம், தப்பாட்டம் போன்ற நிகழ்ச்சிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து, ஜப்பான் நாட்டில் தமிழ் பயிலும் மாணவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சான்றிதழ்களையும், ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெற்ற பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளையும் வழங்கினார்.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், தமிழ் இணைய கல்வி கழகத்தின் மூலம் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் குழந்தைகள் தமிழ் மொழியை கற்றுக் கொள்ளும் வகையில் ஜப்பானில் உள்ள வெளிநாடு வாழ் தமிழ் இந்தியர் சங்கம் மற்றும் ஜப்பான் தமிழ்ச் சங்கம் ஆகிய சங்கங்கள் தமிழ்நாடு அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது.

ஜப்பான் வாழ் தமிழர்களின் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் வரவேற்பு நிகழ்ச்சியிலே பங்கேற்று சிறப்பித்திருக்கக் கூடிய தொழில் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா அவர்களே, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் கிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்களே, இந்தியத் தூதர் மரியாதைக்குரிய சிபி ஜார்ஜ் அவர்களே, தமிழ்நாட்டிற்கான ஜப்பானிய கான்சல் ஜெனரல் அவர்களே, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களே, குண்டான் அவர்களே, ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகளே,

என் உயிரோடு கலந்திருக்கக்கூடிய ஜப்பான்வாழ் அன்பு உடன்பிறப்புகளே, அனைவருக்கும் என்னுடைய மாலை வணக்கம்.

என்னுடைய நிகழ்ச்சி நிரலில் எப்போதுமே, அரசு நிகழ்ச்சி அல்லது அரசியல் நிகழ்ச்சிகளாக ஓய்வில்லாமல் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் நான் கலந்து கொண்டு வருகிறேன்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.5.2023) டோக்கியோவில் நடைபெற்ற, ஜப்பான் வாழ் தமிழர்களின் வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு. கலாநிதி வீராசாமி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ், ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஆனால் அதற்கெல்லாம் மாறாக இங்கு நான் கண்ட கலை நிகழ்ச்சிகளும், நீங்கள் தந்திருக்கக்கூடிய உற்சாக வரவேற்பும், என்னையே நான் மறந்து போய் இருக்கிறேன். மறந்தது மட்டுமல்ல, நெகிழ்ந்து போய் இருக்கிறேன். உணர்ச்சியோடு உங்கள் முன்னால் நின்று கொண்டு இருக்கிறேன். மிக நேர்த்தியாக நம்முடைய கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டியிருக்கக்கூடிய நம்முடைய மாணவச் செல்வங்கள், நம்முடைய குழந்தைகள், கலையை எந்த அளவிற்கு வெளிப்படுத்தி காட்டியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும்போது நான் உள்ளபடியே மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கக்கூடிய மாணவச் செல்வங்களுக்கு, குழந்தைகளுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரங்கிற்குள் நான் வந்ததிலிருந்து நான் தமிழ்நாட்டில்தான் இருக்கிறேனா என்ற சந்தேகம் என்னுடைய உணர்விலே கலந்திருக்கிறது. அந்த அளவிற்கு உங்களுடைய வரவேற்பும், உங்களுடைய உற்சாகமும் வெளிப்படுத்தக்கூடிய நேரத்தில் நான் அதை உணர்கிறேன். அதற்காக நான் மீண்டும் மீண்டும் உங்கள் அனைவருக்கும் எனது இதயபூர்வமான வணக்கத்தை, நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**ஜப்பான் என்றால் உழைப்பு! சுறுசுறுப்பு!**

சூரியன் உதிக்கும் நாடு, ஜப்பான்! ஜப்பான் என்றால், உழைப்பு! சுறுசுறுப்பு! உழைப்பாளர்களின் நாடு இது. வீழ்ந்த வேகத்தில் எழுச்சி பெற்ற நாடு இது! இரண்டாம் உலகப் போரின் போது அணுகுண்டுகள் வீசப்பட்டு பெரும் பாதிப்பு ஏற்படுத்தப்பட்டாலும், மிகக் குறுகிய காலத்தில் எழுந்து நின்று, உலகில் தவிர்க்க முடியாத பொருளாதார சக்தி மிகுந்த நாடாக ஆகியிருக்கிறது ஜப்பான்.

ஜப்பான் மக்களின் உழைப்பால்தான் இது சாத்தியமானது. ஜப்பான் தமிழ் இரு மொழிகளுக்கும் நிறைய ஒற்றுமைகள் இருப்பதாக மொழி ஆய்வாளர்கள் சொல்வார்கள். இரண்டும் ஒரே மாதிரியான இலக்கணக் கட்டமைப்பு கொண்டவை என்று சொல்லப்படுகிறது. தமிழர்கள் ஜப்பான் மொழியைப் படிப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஜப்பானியர்களும் தமிழைக் கற்க முயற்சிக்கிறார்கள்.

பேராசிரியர் சுசுமு ஓனோ அவர்கள் தனது வாழ்க்கையில் 30 ஆண்டுகள் தமிழ் ஜப்பானிய மொழிகளுக்கு இடையிலான தொடர்புகளை ஆய்வு செய்திருக்கிறார். தமிழ் படிப்பதற்காக தமிழகத்துக்கு வந்த சுசுமு ஓனோ அவர்கள், சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் பொற்கோ அவர்களிடம் தமிழ் கற்றார். அமைப்பு ரீதியாகவும், இலக்கண வழியாகவும் இரண்டு மொழிகளுக்கும் ஒற்றுமை இருக்கிறது என்பதை 1970ஆம் ஆண்டே கண்டுபிடித்துச் சொன்னவர் அவர்.

**பொங்கல் திருநாள் - ஜப்பான் அறுவடைத் திருநாள் ஒற்றுமை!**

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதான யயோய் காலத்து ஈமத் தாழிகளில் உள்ள எழுத்துகளுக்கும், தமிழ்நாட்டின் பெருங்கற்காலப் பண்பாட்டின் ஈமத் தாழிகளில் உள்ள எழுத்துகளுக்கும் இடையே ஒற்றுமை இருப்பதைக் கண்டுபிடித்தவர் அவர். சில சொற்களைச் சொல்லி அவை தமிழில் இருந்து ஜப்பான் மொழிக்கு வந்தவை என்று சுசுமு ஓனோ சொல்கிறார். அவர் எழுதிய ஜப்பானிய மொழியின் வேர்களைத் தேடி என்ற நூல் மொழி அறிஞர்களால் வாசிக்கப்பட்ட புத்தகமாக உள்ளது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் யயோய் காலத்தில் தமிழர்கள் ஜப்பான் நாட்டுக்கு வணிக நோக்கில் பயணம் செய்து வந்துள்ளார்கள். நெல் விதைப்பதற்கு முந்தைய சடங்குகளை தமிழர்கள்தான் இங்கு கொண்டு வந்து அறிமுகம் செய்தார்கள் என்று அவர் குறிப்பிடுகிறார். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கும் ஜப்பானிய அறுவடை திருவிழாவுக்கும் ஒற்றுமை இருப்பதை இவர் எழுதி இருக்கிறார்.

தமிழறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஜப்பானுக்கு ஒருமுறை வந்திருந்தபோது டோக்கியோவுக்கும் ஒசாகாவுக்கும் இடையே இருக்கும் நகோயா என்ற நகரத்தை பார்த்துள்ளார். அங்கு இருந்த பெயர் பலகை ஒன்றில் இருந்த எழுத்து தமிழ் பிராமி எழுத்துருவின் சாயலில் இருந்துள்ளது. பிராமியில் எழுதப்பட்ட எழுத்தின் பொருளும், அதற்கான தமிழ்ச் சொல்லின் பொருளும் ஒரே மாதிரி இருப்பதை அவர் சொல்லி இருக்கிறார்.

யூகோ புகுரோய் என்ற ஜப்பானியப் பேராசிரியரும், இரண்டு தமிழ்ப் பேராசிரியர்களும் இணைந்து தமிழ்மொழி மூலம் ஜப்பானிய மொழி கற்க நூல்களை எழுதியுள்ளார்கள். நொபுரு கரோஷிமா அவர்களை ஜப்பான் அறிந்ததை விட தமிழ்நாடு அதிகமாக அறிந்து வைத்திருக்கிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராக இருந்தவர் அவர். சீனாவில் தமிழ்க் கல்வெட்டுகள் இருப்பதாகச் சொன்னவர் அவர்.

தமிழ்ப் பண்பாட்டை விளக்குவதற்காக ஜப்பானிய மொழியில் ஆவணப்படம் எடுத்தவர் அவர். இன்னொரு குறிப்பிடத்தக்க வரலாற்று அறிஞர் பேராசிரியர்

ஷு ஹிக்கோசக்கா அவர்கள். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில்தான் தனது முனைவர் பட்ட ஆய்வை ‘தமிழகத்தில் புத்த சமயத்தின் வளர்ச்சி’ என்ற தலைப்பில் நிறைவு செய்தார்.

**ஜப்பான் மொழியில் சிலப்பதிகாரம் - மணிமேகலை!**

பின்னர் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் ஜப்பானிய மொழியில் மொழி பெயர்த்தார். பழந்தமிழர் வாழ்வை தமிழ் இலக்கியங்கள் சொல்வதைப் போலவே ஜப்பானிய பழைய இலக்கியங்கள் ஜப்பானிய மக்களின் பண்பாட்டை பறைசாற்றுபவையாக உள்ளன. தமிழ் இலக்கிய நூல்களை ஜப்பான் மொழியில் அதிகமாக மொழிபெயர்க்கக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையில் சேலம் ஓமலூரைச் சேர்ந்த சொ.மு.முத்து என்பவருக்கு 2007ஆம் ஆண்டு ஜப்பான் நாடு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

**ஜப்பான் தமிழ்ச் சங்கத்தினரைப் பாராட்டுகிறேன்!**

இப்படி தமிழ்நாட்டுக்கும் ஜப்பானுக்குமான தொடர்பு மிக மிக அதிகம். இத்தகைய பெருமைகளைக் கொண்ட ஜப்பான் நாட்டில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெறக்கூடிய இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். நம் அடுத்த தலைமுறையான குழந்தைகளுக்கு தமிழைப் படிக்க ஊக்குவிப்பது; ஜப்பானில் உள்ள பள்ளிகளில் தமிழ் நூலகங்கள் அமைக்க உதவி புரிவது; பள்ளிகளுக்கிடையேயான தமிழ் சார்ந்த கலைநிகழ்ச்சிகள் நடத்துவது; போட்டிகள் நடத்துவது; தமிழ் இலக்கியத்தை பரப்புவது; தமிழ்நாட்டிற்கு வெளியே வாழும், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத தமிழர்களுக்குத் தமிழைக் கற்றுக்கொடுப்பது; தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது எனப் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வரும் தமிழ்ச் சங்கத்தினரை நான் மனதார பாராட்டுகிறேன். தமிழைக் காப்பது தமிழினத்தைக் காப்பது ஆகும். அதைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள்!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## எம் நெஞ்சுக்கு நெருக்கமான நாடாகத் திகழும்

# சிங்கப்பூர் - தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மேலும் பங்காற்ற வேண்டும்!

## சிங்கப்பூர் ‘தமிழ் முரசு’ நாளிதழுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**சிங்கப்பூர், மே 30-**

**“தம் நெஞ்சுக்கு நெருக்கமான நாடான தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு சிங்கப்பூர் இன்னும் கூடுதலாக பங்காற்ற வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரிலிருந்து வெளிவரும் ‘தமிழ் முரசு’ நாளிதழுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரில் வெளியாகும் ‘தமிழ் முரசு’ நாளிதழுக்கு அளித்த பேட்டியினை சமூக வலைதளப்பதிவில் வெளியிட்டுள்ளார்.

சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கவும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கவும் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரின் ‘தமிழ் முரசு’ நாளிதழின் செய்தி ஆசிரியர் இர்ஷாத் முகம்மதுவுக்கு



பேட்டி அளித்தார்.

அப்பேட்டி விவரம் வருமாறு:–

‘நீண்ட தூரம் ஓடினால்தான் அதிக உயரம் தாண்ட முடியும்’ என்று தமிழக முன்னாள் முதல்வரும் எம் தந்தையாருமான கலைஞர் அவர்கள் சொல்வார். அந்த வகையில், வரும் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டின் பொருளியலை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலராக ($1.35 டிரில்லியன்) உயர்த்த வேண்டும் என்று இலக்கு வகுத்துச் செயல்பட்டு வருகிறேன்.

அந்த இலக்கை எட்டிச் சாதிப்பது என்பது அவ்வளவு எளிதன்று எனத் தெரிந்தாலும் அது நங்களாகவே வகுத்துக்கொண்ட இலக்கு.

**இலக்கை அடைய முடியும்!**

அந்த இலக்கை அடையத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

அதற்கான வரைவுத்திட்டத்தைத் தயாரிக்க ‘போஸ்டன் கன்சல்ட்டிங் குரூப்’ எனும் ஆலோசனை நிறுவனத்தைப் பணியில மர்த்தி உள்ளோம்.

ஒரு டிரில்லியன் டாலர் பொருளியல் என்ற இலக்கை எட்ட தமிழ்நாட்டிற்கு மேலும் 2,300,000 கோடி ரூபாய் முதலீடு தேவை. அதன் மூலம் 4,600,000 பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தர வேண்டும்.

இதற்கான எல்லா முயற்சிகளையும் நாங்கள் எடுத்து வருவதால் தங்களால் இலக்கை அடைய முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**நம்பிக்கை தரும் சிங்கப்பூர்!**

தமிழ் ஆட்சிமொழியாக இருக்கும் நாடு, தமிழர்கள் அதிகம் வாழும் நாடு என்பதால் சிங்கப்பூர் மீது அளவில்லாப் பற்று கொண்டுள்ளதாகவும் அது தம் நெஞ்சுக்கு நெருக்கமான நாடாகத் திகழ்கிறது.

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

## முதல் நாளே

# செங்கோல் வளைந்து விட்டது!

## டெல்லியில் வீரர்கள் - வீராங்கனைகள் கைது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

டோக்கியோ, மே 30–

டெல்லியில் மல்யுத்த வீரர்கள், வீராங்கனைகள் கைது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ள சமூக வலைதளத்தில் ‘‘முதல் நாளே செங்கோல் வளைந்து விட்டது’’ என்று கூறியுள்ளார்.



இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது :–

**பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்மீது மல்யுத்த வீராங்கனைகள் பாலியல் புகார் சொல்லிப் பல மாதங்கள் ஆகிவிட்டன. அவர்மீது இதுவரை அக்கட்சியின் தலைமை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மல்யுத்த வீராங்கனைகள் தொடர்ந்து தலைநகரில் போராடி வருகிறார்கள்.**

**இந்திய நாடாளுமன்றத்தின் புதிய கட்டடத் திறப்பு விழாவின்போது, போராட்டம் நடத்திய அவர்களை இழுத்துச் சென்றும் தூக்கிச் சென்றும் கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது. செங்கோல் முதல் நாளே வளைந்துவிட்டது என்பதையே இது காட்டுகிறது. குடியரசுத் தலைவரையே புறந்தள்ளி, அனைத்து எதிர்க்கட்சிகளின் புறக்கணிப்புக்கும் ஆளாகி நடைபெறும் திறப்புவிழா நாளில் அராஜகமும் அரங்கேறுவதுதான் அறமா?**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.